REGD. NO. M. 6511 ★ தனி இதழ் 0—1—0 (7 காசுகள்) ★ இலங்கையில் 10 சதம் ★ PHONE : 55630

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர் இரா. நெடுஞ்செழியன்
The "Nam Nadu" A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F.

'நம் நாடு'
புதிய சந்தா விகிதம்
★

மூன்று மாதம்	...	...	ரூ. 6
ஆறு மாதம்	...	...	ரூ. 12
ஒரு வருடம்	...	...	ரூ. 24

தனி இதழ் 7 காசுகள்
இலங்கையில் 10 சதம்

மலர் 4] சென்னை : சித்திரை 19உ புதன் (1—5—57) ★ ★ வெளியூர்: சித்திரை 20உ வியாழன் (2—5—57) இதழ் [276

இளைத்தவர்க்கு பலம் ஊட்டுங்கள்

எல்லாவற்றையும் எதிர்த்துகொண்டே இருப்பதல்ல எதிர்க்கட்சி

சபையின் கண்ணியத்தைக் காப்பாற்ற எங்கள்பங்கினைஒழுங்காகச்செய்வோம்

நோயின் மூல காரணம் அறிந்து மருந்து தாரீர்

சபைத் தலைவரைப் பாராட்டி அண்ணு பேருரை

சென்னை சட்டசபைத் தலைவராக டாக்டர் யு. கிருஷ்ணு ராவ் அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதும், அண்ணு அவர்கள் அவரைப் பாராட்டிப் பேசுகையில் குறிப்பிட்டதாவது :—

"மதிப்பிற்குரிய அவைத் தலைவர் அவர்களே! தாங்கள் இந்தச் சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பட்டிருப்பதில் பெருமகிழ்வடைகிறேன்; இதயபூர்வமான பாராட்டுதல்களைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

"தாங்கள் போட்டியின்றித் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும்; ஆனல் போட்டி தவிர்க்க முடியாத ஜனநாயகக் கடமையாகி விட்டது. ஆனலும் போட்டி, தங்கள் புகழை உயர்த்தும் வகையிலேயே முடிவுற்றிருக்கிறது.

தங்களின் அறிவாற்றலை நான் மாணவப் பருவமுதல் அரசியல் நடவடிக்கைகளைக் கவனித்து வரும் இன்றுவரை அறிந்து வருகிறவன். தங்களின் நேர்மை இந்தச் சபையின் கண்ணியத்தையும், பெருமையையும் நிச்சயம்காப்பாற்றும்என்ற உறுதிப்பாடு எங்களுக்கு இருக்கிறது.

'தாங்கள் ஒரு உயர்ந்த குடும்பத்தில் தோன்றியவர்கள். தங்கள் வட்டாரத்தில் ஈடு எடுப்பற்ற புகழுடன் விளங்கும் டாக்டராவீர்கள்.

'தாங்கள் மருத்துவத் துறையில் பெற்றுள்ள அறிவையும் ஆற்றலையும் நாங்கள் அறிவோம். அதில் யார் இளைத்தவர்களோ அவர்களுக்கு மருந்து கொடுத்து பலம் பெறச் செய்யும் தாங்கள், அரசியல் துறையிலும் இளைத்தவர்களிடம் அன்பு கொண்டு நல்லதொரு அரசியல் மருத்துவராகவும் விளங்க வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறேன்.

"நம் நாட்டில் ஜனநாயகம், குழந்தைப் பருவத்தில் இருக்கிறது. அதிலும் நாங்கள், இது போன்ற பாராளுமன்ற ஜனநாயக அமைப்புகளின் நடவடிக்கைகளுக்குப் புதியவர்கள் — அனுபவமில்லாதவர்கள். அந்த வகையில், குழந்தை தவறு செய்துவிட்டால் — குறும்புத்தனமாக நடந்துகொண்டால், தாய், அதிகமாக அடித்துவிடாமல் கண்டித்து, கட்டி அணைத்துக் கோள்வதுபோல், எங்களையும் தாங்கள் நடத்தவேண்டும்; தங்கள் புன்சிரிப்போடு கூடிய கட்டளையினல் திருத்தவேண்டும்; பயன்படத்தக்க ஜனநாயகவாதிகளாக ஆக்க வேண்டும் என்று கேட்டுக் கோள்கிறேன்.

"இந்த நாட்டில் இன்று, அரசியலில் பெருந்தன்மை மிக அதிகம் தேவைப்படுகிறது. அரசியல் பெருந்தன்மை என்பது கொடுத்துவாங்கப்பட வேண்டிய ஒன்றே தவிர, ஒருவழி வியாபாரம் அல்ல! மிகப் பெருந்தன்மையான குடும்பத்தைச் சேர்ந்தவரும் பெருந்தன்மையான தொழிலில் ஈடுபட்டிருப்பவருமான தாங்கள், இதை அறியாதவர் அல்ல!

"சிறு சிறு தவறுகள் ஏற்பட்டுவிட்டால், அவற்றைத் திருத்துகிற அதிகாரபீடத்தில் இன்று தாங்கள் அமர்ந்திருக்கிறீர்கள். எதிர்க்கட்சியினர் என்றால், நாங்கள், சர்க்கார் செய்யும் எதையும் —எல்லாவற்றையும் எதிர்த்துக் கொண்டிருப்போம் என்பதல்ல!

"உதாரணத்திற்குச் சொல்ல வேண்டுமானல், எதிர்க்கட்சி என்பது, மாப்பிள்ளைத் தோழனுக்கு ஒப்பிடக்கூடியதுதான். மாப்பிள்ளைக்குக் கூட சில நேரத்தில் எரிச்சல் வந்து, தோழனின் கையை உதறிவிடக்கூடும். ஆனல் தோழன், மாப்பிள்ளையின் கையை இடைவிடாமல் பிடித்துக் கொண்டிருப்பதற்குக் காரணம், 'காரியங்கள் ஒழுங்காக நடைபெறவேண்டும்,' என்ற நல்லெண்ணம் தான். அதுபோல நாங்கள், சர்க்கார் காரியங்கள் ஒழுங்குற நடைபெறவேண்டும் என்பதற்குத்தான், எதிர்க்கட்சியில் இருக்கிறோம்.

"சட்டசபையில், நாங்கள் புதியவர்கள் — அனுபவமில்லாதவர்கள் என்பது உண்மைதான் என்றாலும், அந்த அனுபவத்தை நாங்கள் உரிய காலத்தில் பெறத் தவறிவிட்டவர்களே தவிர, அதனைப் பெறவே முடியாதவர்கள் அல்ல, என்பதையும் பணிவன்புடன் தெரிவித்துக் கொள்கிறேன்.

"நாங்கள் ஒரு விசித்திரமான அரசியல் கூட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்பதை நீங்கள் அறிவீர்கள்; இந்தச் சபையும் நன்கு அறியும். நாங்கள் அப்படி விசித்திரமான அரசியல் கூட்டத்தவராயிருப்பதற்கு, நாட்டில் உள்ள விசித்திரமான நிலைகள்தான் காரணமாகும்.

(4-ம் பக்கம் பார்க்க)

தலைமைக்கழகம் அறிக்கைஎண் 2/57

ஏற்காடு தனி

(மலை வகுப்பினர்) தொகுதிக்கு

தி. மு. க. அபேட்சகர்

★

சேலம் மாவட்டம், ஏற்காடு தனி (மலைவகுப்பினர்) தொகுதிக்கு தி. மு. கழகத்தின் அபேட்சகராக தோழர் சி. சின்னு (கவுண்டர்) அவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டிருக்கிறார்கள் என்பது இதன் மூலம் அறிவிக்கப்படுகிறது.

இரா. நெடுஞ்செழியன்
'அறிவகம்' சென்னை 29-4-57 } பொதுச்செயலாளர், தி. மு. க.

2-ம் வகுப்புப் பெட்டிகள் ஒழியும்!

புதுடில்லி, ஏப். 30—

ஏழுமண்டல இரயில்வேக்களிலுள்ள பெரும்பாலான கிளைப் பாதைகளில் 2-ம் வகுப்பு வசதி ஏற்கனவே எடுபட்டுவிட்டது.

சென்னை சுற்றுப்புற நீராவி இரயில்வேக்களில் உள்ள 2-ம் வகுப்பு வசதி ஜூலை 1-ந் தேதி முதல் எடுபட்டுவிடக்கூடுமாம்.

மின்சார இரயில்கள் எதிலும் இப்போது 2-ம் வகுப்பே கிடையாதாம்.

பம்பாய் சுற்றுப்புற நீராவிப் பாதைகளில் 2-ம் வகுப்புப் பெட்டிகள் சீக்கிரம் எடுபட்டுவிடுமென்றும் கூறப்பட்டுள்ளது.

ஏற்காடு மலைவகுப்பினர் தொகுதி மறுதேர்தல்

தி. மு. க.—காங்கிரஸ் நேரடிப் போட்டி

சேலம், ஏப். 29—

சேலம் மாவட்டம் — ஏற்காடு மலை வகுப்பினர் சட்டசபை உபதேர்தலில் போட்டியிடுவதிலிருந்து இராமசாமி, அரப்பளி ஆகிய இருவரும் தங்கள் அபேட்சாப் பத்திரங்களை 29-ந் தேதியன்று திரும்பப் பெற்றுக் கொண்டனர்.

இறுதியாக, கொழந்தை கவுண்டர் (காங் - நுகத்தடி பூட்டிய காளைகள் சின்னம்) சி. சின்னு கவுண்டர் (தி. மு. க. - சின்னம்—உதய சூரியன்) ஆகிய இருவரும் போட்டியிடுகின்றனர். இது நேரடிப் போட்டியாகும்.

மே திங்கள் 27-ல் வாக்கெடுப்பு நடைபெறும் ; மே 29 - ல் சேலத்தில் வாக்குகள் எண்ணப்படும். (ந. - நி.)

மறைந்த பணம் திரும்பக் கிடைத்தது!

சேலம் அரசாங்கப் பாங்கியில் அதிசயம்!

சேலம், ஏப். 30—

சேலம் அரசாங்கப் பாங்கியில் சென்ற 23-ந் தேதியன்று ரூ. 1,60,000 காணமல் போனதாக செய்தி வெளியாகியது.

30-ந் தேதியன்று காலை, காணமல்போனதாகக் கூறப்படும் ரூ. 1,60,000 மதிப்புள்ள 'கரன்சி' நோட்டுகள் கொண்ட கட்டுகள் இரும்புப் பெட்டிக்கு அடியில் இருந்ததைப் பாங்கி அதிகாரிகள் இன்று கண்டுபிடித்தனர்.

ஒரு வாரத்திற்குமுன் காணமல்போன பணம் இன்று திரும்பக் கிடைத்தது.

'ஆண்டவனி'ன் மார்ச் மாத வருமானம்!

திருமலை, ஏப். 30—

திருப்பதி ஏழுமலையானுக்கு மார்ச் மாதம் ரூ. 1,79,848-7-3க்கு இந்திய நாணயங்களும், ரூ. 609-2-0-க்கு ஐதராபாத் 'ஹாலி' நாணயங்களும், ரூ. 289-13-0 தோலா எடை தங்கமும், ரூ. 5,320 தோலா எடை வெள்ளியும், 11 சவரன்களும், ரூ. 1,143-8-0-க்கு பழைய ஜார்ஜ் — எட்வர்ட் — இராணி வெள்ளி ரூபாயும் வருமானமாகக் கிடைத்துள்ளதாம்!

சென்னை - சட்டசபையில்.........!



29-4-57-ந் தேதியன்று அண்ணு அவர்கள் பதவிப் பிரமாணமேற்கும் காட்சி.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ்

சென்னை 1—5—57 புதன்

என்னே நிர்வாகம்?

டெல்லிப் பெரியவர்களின் நிர்வாகத் திறனை எடுத்துச் சொல்ல அகராதியில் சொற்கள் கிடையாது. அத்தனை இலட்சணம் பொங்கிவழிகிறது, அந்த நிர்வாகத்தில்.

உணவுப் பொருள்களின் விலை ஏற்றம் கடந்த ஒரு ஆண்டுக்கு மேலாக, ஏழை—எளிய மக்களை எந்த அளவு பாதித்து வருகிறது என்பதை, பெரிய இடத்தில் அமர்ந்து உல்லாசம் அனுபவிக்கும் அவர்களால் உணர முடியாமல் போய்விட்டதில் நமக்கு ஆச்சரியம் ஏற்படவில்லை. ஆனால், அவர்கள் அதனை உணர்ந்திருப்பதாக எடுத்துரைத்து அந்த நிலை மாற்றுவோம் என்று கூறி மேற்கொண்ட நடவடிக்கைகள் இருக்கின்றனவே, அவற்றின் முரண்பாடுகளை அவர்கள் அறியாமல் இருப்பதுதான் நமக்கு ஆச்சரியத்திலும் ஆச்சரியமாக இருக்கிறது.

உணவுத் துறையில் தன்னிறைவு பெற்றுவிட்டோம் என்றார் ஒரு மந்திரி.

அடுத்த நாள், சுமார் எண்பத்தைந்து கோடி ரூபாய் பெறுமான உணவுப் பொருள்களை இறக்குமதி செய்யப்போகிறோம் என்றார் மற்றுமோர் மந்திரி.

இந்த டில்லிப் பெரியவர்களின் பெருநகைப்பிற்கிடமான இந்த அறிவிப்புகளில் அடங்கிக் கிடக்கும் முரண்பாட்டினை முன்பே நாம் இங்கு விளக்கியிருக்கிறோம்.

இந்த அறிவிப்புகள், மக்கள் சபையில் ஒலித்துக்கொண்டிருக்கும்போது எல்லாம், விஷம் போல ஏறிக்கொண்டிருந்தன, உணவு மற்றும் அத்தியாவசியப் பண்டங்களின் விலைகள். இதனைக் கட்டுப்படுத்த வேண்டுமென்ற மக்களின் ஓங்காரக் குரல், டில்லிப் பெரியவர்களின் செவிகளில் புகவே நெடுநாட்களாயின.

பின்னர், 'போதிய உணவுக் கையிருப்பு எம்மிடம் உண்டு; நியாய விலைக் கடைகள் மூலம் அவற்றை விற்போகிப்பதின் மூலம், விலை ஏற்றத்தைத் தடுப்போம்,' என்று உறுதி மொழி பகன்றனர்.

கிடங்குகளில் முடங்கிக் கிடந்த முடைநாற்றம் பிடித்த அரிசி, மார்க்கெட்டிற்கு வந்தும் விலைகள் இறங்கவில்லை; காரணம், இந்த நியாய விலை அரிசியை வாங்கியும் உண்ண முடியவில்லை; மக்கள் அநியாய விலை தந்தேனும் அளவு குறைவான அரிசியை வாங்குவதையே விரும்பினர். இந்த நிலையை மாற்றவும், மக்கள் தான் அடிவயிறு வலிக்க வலிக்கக் குரல் கொடுக்கவேண்டியதாயிற்று.

ஓராண்டுக்கு மேலாகியும், இன்று விலைவாசிகள், ஏற்றத்திற்கு முன்பிருந்த நிலைக்கு இறங்கிபாடில்லை. ஏறிய விலைகளுக்கும்; பழைய விலைகளுக்கும் இடையில் ஒரு நிலைக்கு அவை வந்துள்ளன.

இந்த இடைநிலையை—அதாவது, பழைய நிலையைவிட உயர்ந்த விலைவாசி நிலையை ஒரு தரப்படுத்த, கொள்ளை இலாப நோக்குடைய வியாபாரிகளும், சில சமூக விரோதிகளும் முயற்சிக்கின்றனர் என்று சந்தையில் பகிரங்கமாகவே பேசிக்கொள்ளப்படுகிறது.

இந்த முயற்சிக்கு ஊக்கமளிக்கும் வகையில், மத்திய விவசாய மந்திரி டாக்டர் பஞ்சாப்ராவ் தேஷ்முக் அவர்கள் மாநிலங்களுக்கு அனுப்பியுள்ள அறிக்கை ஒன்று அமைந்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது உண்மையானால், நடைமுறை நிலைகளை உணரமுடியாத மத்திய மந்திரி ஒருவரின் குருட்டுத்தனமான போக்கிற்காக அவதியுறும் மக்கள் வருந்தாமலிருக்க முடியாது.

விலைகள் வீழ்ந்துவிட்டதாக சில சுயநலமிகள் சிருஷ்டிக்கும் கற்பனையை நம்பித்தானோ என்னவோ, அந்த மந்திரி, 'விலைக் கட்டுப்பாடுகளை நீடிக்க முடியாது' என்று கூறுகிறாரோ என்னவோ நாம் அறியோம்!

ஏறிய விலைவாசிகள் இன்னும் இறங்கி, பழைய நிலைக்கு வரவில்லை. ஏன், விலைவாசி ஏற்றத்திற்கு யார் காரணம்? என்பதையே இன்னும் இந்த சர்க்கார், மந்திரிகள் பிழையற அறிந்துகொண்டதாகத் தெரியவில்லை.

உண்மை அப்படியிருக்கும் போது, விலைவாசிகள் வீழ்ந்துவிட்டதாகக் கருதுவது முதல் தவறு. இரண்டாவதாக, விலைவாசிகள் இறங்கினால் விவசாயிகள் பாதிக்கப்படுவர் என்று அச்சமூட்டி, முதல் தவறுக்கு நியாயம் தேட நினைப்பது இரண்டாவது தவறு.

என்றுமில்லாத அக்கறை, கரிசனம் திடீரென விவசாயிகள்மீது இந்தப் பெரியவர்களுக்கு ஏற்பட்டுவிட்டது, பேராச்சரியத்திற்குரியதுதான். விலைவாசிகள் வீழ்ந்து தவித்த போது, இந்த விவசாயிகளுக்கு—அதிலும் குறிப்பாகத் தென்னாட்டு விவசாயிகளுக்கு உதவ வராத உத்தமர்கள் இப்போது இறங்காத விலைகள், வீழ்ந்துவிட்டதாகக் கதைப்பது ஏன்? அந்தக் கதைப்பிற்கு, விவசாயிகள் மீது பழிபோடுவது ஏன்?

விலைவாசிகள் ஏறியுள்ளதும், இறங்கியுள்ளதும் கூடத் தெரிந்துகொள்ள முடியாதவர்களாய்—பொறுப்பற்றவர்களாய் மந்திரிகள் என்ற அந்தஸ்துடன் பவனி வருகிற டில்லிப் பெரியவர்களின் நிர்வாகத் திறனை என்னென்று கூறுவது?

1,40,000 கேரள தொழிலாளர்கள் பயன்பெறுவர்

திருவனந்தபுரம், எப். 30—

கேரளத்தில் விரிவாக்கப்பட்டுள்ள அரசாங்க இன்ஷ்யூரன்ஸ் திட்டப்படி, சுமார் ஒரு இலட்சம் தோட்டத் தொழிலாளர்கள் பயன்பெறுவர். இந்தத் திட்டத்தின் மூலம் எற்கனவே 40,000 தொழிலாளர்கள் பலனடைந்துள்ளனராம்.

அமைச்சர்கள் ஊதியம்

ரூ. 500 என நிர்ணயம்

திருவனந்தபுரம், எப். 29—

கேரள மாநில அமைச்சர்களுக்கும், சட்டசபைத் தலைவருக்கும், மாதம் ரூ. 500 ஊதியமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது.

சுற்றுப்பிரயாண செலவு சம்பந்தமாகவும் மாற்றங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

திருவனந்தபுரத்தில் 5 மைல் சுற்றளவில் பிரயாணம் மேற்கொண்டால் அதற்குப் 'படி' கிடையாது; ஆனால் மாதம் ரூ. 100 பெட்ரோல் செலவிற்கு தரப்படுமாம்.

5 மைல்களுக்கு அதிகமான தூரம் செல்பவருக்குக் குறிப்பிட்ட விகிதத்தில் பிரயாணப் 'படி' தரப்படுமாம்.

திருமணம் செய்யத் துரிதப்படாதீர்!

பெற்றோர்களுக்கு அறிவுரை

சென்னை, எப். 29—

தஞ்சையில் பிறந்து, லண்டன் தமிழ்ச் சங்கத் தலைவியாக தேர்ந்தெடுக்கப்பட்டுள்ள டாக்டர் குணம் அம்மையாருக்கு, சென்னை ஒய். எம். சி. எ. கட்டிடத்தில் ஓர் தேநீர் விருந்தளிக்கப்பட்டுள்ளது.

விழாவில் பேசுகையில் அவர், பெற்றோர்கள் இளம் பெண்களுக்கு அவசரப்பட்டு மணம் முடிப்பதை வன்மையாகக் கண்டித்துள்ளார்.

"பெண்களுக்கு 12 முதல் 20 வயதுவரை உள்ள காலம் மிக முக்கியமானது; அந்தக் காலத்தில் முழுச் சுதந்திரம் அளிப்பதன் மூலம் அவர்களின் எதிர்காலத்தை அவர்களே நிர்ணயித்துக்கொள்ள இயலும்" என்று அவர், 'பெண்களும் பொது வாழ்வும்' என்ற தலைப்பில் பேசுகையில் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அவர் பேசுகையில், சட்டத்தின் மூலம் பல சீர்திருத்தங்கள் செய்த பின்னரும் பழைய பழக்கவழக்கங்களுக்குக் கட்டுப்பட்டு, சமுதாயத்திலிருந்து ஒரு சில பெண் மகளிர் இன்னும் ஒதுங்கி இருப்பதைச் சுட்டிக்காட்டி, 'மாதர் முன்னேற்றத்திற்கு மிகவும் அவசியமானது பழைய கோட்பாடுகளைப் புறக்கணிப்பதேயாகும்' என்று கூறியுள்ளார்.

'இருமொழி மாநில அமைப்பு தோல்வியுறும்'

வீம்புக்குச்சோதனைநடத்துகின்றனர்

ஆமதாபாத், எப். 29—

"இந்த மாநிலத்தில், வீம்புக்கு இருமொழி மாநில சோதனை நடத்துகின்றனர்; இருந்தும், இங்குள்ள பல்வேறு பகுதி காங்கிரஸ் குழுக்களையே ஒன்றாக இணைக்க முடியவில்லை. எனவே, நிச்சயம் பம்பாய் இருமொழி மாநில அமைப்பு தோல்வியுறும்"

என்று குசராத் ஜனதா பரிஷத் தலைவர் இந்துலால் யக்னிக், ஒரு மாபெரும் கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

நாகர்கோவில் அருகில் உப்புத் தொழிற்சாலை?

சென்னை, எப். 30—

1956-ம் ஆண்டில் 2 கோடி 20 இலட்சம் மணங்கு உப்பு சென்னை பகுதியில் உற்பத்தி செய்யப்பட்டுள்ளதென்றும், சமீபத்தில் 14 இலட்சம் மணங்கு உப்பு இந்தோனேஷியாவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டிருக்கிறதென்றும் தெரியவருகிறது.

சென்னை உப்புத் தொழில் பிராந்திய போர்டின் கூட்டம் நடைபெற்றபோது, ரூ. 14 இலட்சம் செலவில் தயாரிக்கப்பட்டுள்ள விரிவான திட்டங்களை போர்டு ஏற்றுக்கொண்டுள்ளது.

நாகர்கோயில் அருகே மாதிரி உப்புத் தொழிற்சாலை ஒன்றை ரூ. 2 - இலட்சம் செலவில் 240-ஏகர் பரப்பளவில் அமைப்பதற்கு ஒப்புதல் அளிக்கப்பட்டிருக்கிறது.

'பத்திரிகைகளின் சுதந்திரத்தைப் பறிப்பது சர்வாதிகாரச் செயலாகும்'

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி அறிவுரை

சென்னை, எப். 28—

தென்னிந்திய பத்திரிகைகளின் 19-வது மாநாடு நேற்று சென்னையில் நடைபெற்றது.

டாக்டர் ஏ. இலட்சுமணசாமி மாநாட்டை திறந்துவைத்துப் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சனநாயக நாட்டிலும் சரி, வேறு எந்த அரசாங்கத்திலும் சரி, பத்திரிகைச் சுதந்திரம் காப்பாற்றப்பட வேண்டியது மிகவும் அவசியமாகும். பத்திரிகை சுதந்திரத்தை ஒடுக்கியுள்ள நாடுகளில் சர்வாதிகார ஆட்சிதான் ஏற்பட்டுள்ளது.

"சுதந்திரம் கிடைத்த பின்னர் பத்திரிகைகளின் கடமையில் மாறுதல் ஏற்பட்டுள்ளது. இப்போது வேறு பிரச்சினைகளைப் பற்றி ஆராயவேண்டியவர்களாக உள்ளோம். பத்திரிகைகளின் கடமை மிகவும் கடினமானது. பொதுமக்களுக்குத் துரோகம் நினைக்காது வேலை செய்வதே பத்திரிகைகளின் கடமையாகும்."

கிறித்துவர்களான தாழ்த்தப்பட்டவர்கள்

கல்விச் சலுகைகள் பெறுவது பற்றி சர்க்கார் உத்தரவு

சென்னை, எப். 29—

'தாழ்த்தப்பட்டவர்களுக்குத் தரப்படும் சகல கல்விச் சலுகைகளும், அவர்களில் கிறித்துவ மதத்தைத் தழுவியவர்களுக்கும் தரப்படல் வேண்டும்' என்றும், இந்த 1957 - 58ம் ஆண்டு முதல் இது நடைமுறைக்கு வருமென்றும் சர்க்கார் உத்தரவு பிறப்பித்திருக்கிறார்கள் என்று தெரியவருகிறது.

இதை ஒட்டி, சென்னை கல்விச் சட்டங்களில் தேவையான மாற்றங்கள் செய்யப்படும் என்றும் கூறப்படுகிறது.

மலைசாதியினர் வெறுப்பு!

இந்தியாவின் ஒற்றுமையைப் பாதிக்குமென்கிறார் கவர்னர்!

கோரபுட், எப். 29—

"மலைசாதியினரை ஒரு தனிப்பட்ட சமுதாயமாக உருவாக்குவதும், கருதுவதும் இந்தியாவின் ஒற்றுமையைப் பாதிக்கும்; இந்தப் போக்கை மலைசாதியினரே வெறுக்கின்றனர்.

"மலைசாதியினருக்காக வகுக்கப்படும் அபிவிருத்தித் திட்டங்களில் அவர்களுக்கு நவீன கல்வி அறிவு தருவதற்குத் திட்டமிடப்பட வேண்டும்"

என்று, ஒரிசா மாநில முதலமைச்சர் மேதாப், மலைசாதியினர் பிரதிநிதிகள் அடங்கிய கூட்டத்தில் பேசுகையில் தெரிவித்துள்ளார்.

ரூ. 36 லட்சம் செலவில் சர்க்கரை ஆலை

தென்னாற்காட்டில் நிறுவப்படும்

கடலூர், எப். 30—

நாள் ஒன்றுக்கு 600 டன் கரும்பு பிழியக்கூடிய கூட்டுறவுக் கரும்பு ஆலை ஒன்றை தென்னாற்காடு மாவட்டம் பெண்ணாகரத்தில் நிறுவ அரசாங்கம் அனுமதியளித்துள்ளதாம். இதற்கு ரூ. 36 இலட்சம் செலவிடப்படுமாம்.

இந்த ஆலை நிறுவனம் நிறுவப்பட்டதும், விருத்தாசலம், சிதம்பரம், கள்ளக்குறிச்சி, திருச்சி, பெரம்பலூர், உடையார்பாளையம் ஆகிய பகுதிகளில் உள்ள விவசாயிகளுக்கு நன்மை ஏற்படும் என்று கருதப்படுகிறது.

ஆலைக்கான செலவில் அரசாங்கம் ரூ. 20 இலட்சம் மானியமாகவும், ரூ. 6 இலட்சம் பொது மக்களிடமிருந்தும், மிகுதி ரூ. 10 இலட்சத்தை பங்குதாரர்கள் மூலமும் பெறப்படும்.

'நெருப்புடன் விளையாடாதீர்'

'நாடு கல்லறைத் திடலாக ஆகிவிடும்'

'அழிவு உறுதி' என்று ரஷ்யா எச்சரிக்கிறது

மாஸ்கோ, எப். 27—

மேற்கு ஜெர்மனியை ரஷ்யா கடுமையாக எச்சரித்திருப்பதாகச் செய்திகள் தரப்பட்டிருக்கிறது.

மேற் ஜெர்மனியில் அணுஆயுதங்களையோ அல்லது அணு ஆயுதங்களை உபயோகிப்பதற்கான தளங்கள் எற்படவோ அனுமதித்தால் நிச்சயம் ரஷ்யா எதிர் நடவடிக்கையை மேற்கொண்டு ஜெர்மன் மக்கள் இதுவரையில் அனுபவித்திராத அளவிற்குப் பேராபத்தையும், சேதத்தையும் விளைவிக்கக்கூடுமென்று அந்த எச்சரிக்கையில் குறிப்பிட்டுள்ளதாம்.

ஒரே ஒரு நவீன நீர்வளிக்குண்டு மூலம் ஜெர்மனி முழுவதையும் ஒரு 'கல்லறைத் திடலாக' ஆக்கமுடியும் என்றும் மாஸ்கோவிலுள்ள மேற்கு ஜெர்மன் தூதுவரிடம் தரப்பட்ட செய்தியில் குறிப்பிட்டிருக்கிறதாம்.

ஏற்படப்போகும் அபாயகரமான விளைவுகளை அந்நிய உதவியினால் தடுக்கமுடியாது என்றும், 'அந்நியரின் உதவி'யைப் பற்றி பேசுவதைவிட நெருப்போடு விளையாடாமல் இருப்பதுதான் அறிவுடமையாகும் என்றும் தெரிவிக்கப்பட்டிருக்கிறதாம்.

அமெரிக்க உதவியை ஜோர்தான் ஏற்குமா?

அம்மான், எப். 29—

ஜோர்டானின் பொருளாதார முன்னேற்றத்திற்கு ஒரு கோடி டாலர் (சுமார் ரூ. 4,75,00,000) உடனடியாகத் தருவதற்கு அமெரிக்கா தயாராக இருக்கிறதாம்! ஆனால், இந்த உதவியை ஜோர்டான் ஏற்றதாகத் தகவல் இல்லை.

ரஷ்யத் தலைவரின் 'சமாதான'க் குரல்!

பாரிஸ், எப். 29—

"மனிதனுக்குக் காற்றும், வெளிச்சமும், உயிரும் எப்படி அவசியமோ, அவ்வளவு அவசியம் சமாதானமுமாகும்"

என்று, சீனாவிலுள்ள காண்டனில் 10 இலட்சம் மக்கள் அணிவகுப்பில் பேசுகையில், ரஷ்ய மக்கள் தலைவர் மார்ஷல் வரோஷிலாவ் வலியுறுத்தியுள்ளார்.

இல்லறம் புக இளைஞர்கள் துடிப்பு!

கோலாலம்பூர், எப். 30—

மலேயாவில் வாழும் 65 இலட்சம் பேர்களில் 20 சதம் பேர் இந்தியர்களாவர்.

இவர்களில் நூற்றுக்கணக்கான இளைஞர்கள் இந்தியாவுக்கு திரும்பத் துடிக்கின்றனராம்.

அவர்கள், மணம் செய்துகொள்ளும் பொருட்டே தாயகம் திரும்புவதாக கப்பல் கம்பெனி அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

வரும் மூன்று மாதங்களுக்குக் கப்பல் பிரயாணத்திற்கான டிக்கெட்டுகள் எற்கனவே விநியோகிக்கப்பட்டுள்ளதாம்.

சேலம் நகரில் புதிய தி.மு. கழகக் கிளைகள் துவக்கம்

தோழர்கள் கண்ணதாசன், சுப்பிரமணியம், கிருஷ்ணன் ஆகியோர் பேச்சு

சேலம், ஏப். 29—

குகை பென்ஷன் லைனில் 31-வது வட்டத்தில் சென்ற மாதத்தில் புதியதாக ஏற்படுத்தப்பட்ட தி. மு. கழகக் கிளையில் தோழர் கண்ணதாசன் 28-ந் தேதியன்று கொடியேற்றிவைத்தார். தோழர் கே. பெருமாள் தலைமை வகித்தார்.

தோழர் கண்ணதாசன் குறிப்பிட்டதாவது:—

"சேலத்தில் இந்தப் பகுதியில் கிளைக் கழகங்கள் ஏற்பட்டவண்ணம் இருக்கின்றன. சேலம் நகரில் உள்ள கிளைக் கழகங்கள் நல்ல முறையில் பணியாற்றி வந்திருக்கின்றன. சமீபத்தில் சேலத்தில் நடந்த தேர்தலில் பொதுச்செயலாளர் நெடுஞ்செழியன் அவர்களுக்குக் கட்சி பற்றில்லாத பல தோழர்கள்கூட ஆதரவளித்தார்கள். கட்சித் தோழர்களும், கட்சிப் பற்றற்றத் தோழர்களும் விடாமுயற்சியுடன் உழைத்தும் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் தோல்வியுற்றார் என்பதைக் கேட்டவுடன் வருந்தாதவர்கள் இல்லை. தாதகர்பட்டி பகுதியில் தி. மு. கழக கிளை இல்லை என்ற குறை நீக்கப்பட்டுவிட்டது. இன்றைக்குப் புதியதாக ஆரம்பிக்கப்படும் கிளைக் கழகங்கள் நல்ல முறையில் பணியாற்றி, சேலத்தை கழகத்தின் மிகவும் முக்கியமான கேந்திரமாக விளங்கும்படி செய்யப் பணியாற்ற வேண்டுமென்று இங்குள்ள தோழர்களைக் கேட்டுக்கொள்கிறேன்."

அடுத்து பேசிய தோழர் சிற்றுளி-சுப்பிரமணியம் கூறியதாவது:—

"சேலம் நகரில் எல்லாப் பகுதிகளிலும் கழகங்கள் இருக்கின்றன. இந்தப் பகுதியில் கிளைக் கழகம் இல்லை என்ற குறையை நீக்கவே கிளைக் கழகம் சமீபத்தில் துவக்கப்பட்டது.

தி. மு. கழகம்தான் தேசிய விடுதலை இயக்கம்; அதனால்தான் தேர்தலில் எதிர்பாராத இடங்களிலிருந்தெல்லாம் நமக்கு ஆதரவுகள் கிடைத்தன. குரானை தி. மு. கழகம் எதிர்ப்பதாகப் பலர் தவறான பிரச்சாரம் செய்தார்கள்; அந்தத் தவறான பிரச்சாரத்தைக் கண்டு ஏமாறாமல் இப்பகுதியிலும், மற்ற பகுதியிலுமுள்ள முஸ்லீம் சமுதாயத்தில் 90 சத விகிதத்தினர் தி. மு. கழகத்திற்கே வாக்களித்தனர். அதற்காக அவர்களுக்கு நன்றி செலுத்துகிறோம்."

அடுத்துப் பேசிய தோழர் இ. ஆர். கிருஷ்ணன் (நகர தி. மு. கழகச் செயலாளர்) குறிப்பிட்டதாவது :—

"தி. மு. கழகம் நாளுக்கு நாள் வெகுவாக வளர்ந்து வருகிறது; தமிழ்நாடெங்கும் கிளைக் கழகங்கள் துவங்கியவண்ணம் இருக்கின்றன; புதிய உறுப்பினர்கள் தி. மு. கழகத்தில் சேர்ந்துகொண்டே இருக்கிறார்கள்.

"தேர்தலில் தி. மு. கழகத்திற்கு சுமார் 17 இலட்சம் வாக்குகள் கிடைத்தன. இதைக் காணும்பொழுது மக்கள் ஆதரவு தி. மு. கழகத்திற்கு பெரும்பான்மையாக இருக்கிறது என்பது விளங்கவில்லையா? தேர்தலுக்குப் பிறகு சேலத்தில் மாத்திரம் சுமார் ஆயிரம் பேர் தி. மு. கழகத்தில் புதிய உறுப்பினர்கள் சேர்ந்திருக்கிறார்கள்; 7 அல்லது 8 கிளைக் கழகங்கள் திறக்கப்பட்டுள்ளன. இதைவிட வேறு என்ன வளர்ச்சி வேண்டும்? ஆகவே, எல்லோரும் தி. மு. கழகத்தில் சேர்ந்து பணியாற்றுமாறு கேட்டுக்கொள்கிறேன்."

தாதகாப்பட்டி, சஞ்சீவிராயன் பேட்டை ஆகிய இடங்களில் கிளைக் கழக துவக்க விழாக்கள் நடைபெற்றன. இந்த கூட்டங்களில் தோழர்கள் கண்ணதாசன், சிற்றுளி-சுப்பிரமணியம், இ. ஆர். கிருஷ்ணன் முதலியவர்கள் பேசினர்.

தாதகாபட்டியில் 28-ந் தேதி மாலையில் நடந்த தி. மு. கழகப் பொதுக்கூட்டத்தில் தோழர் கண்ணதாசன் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"தேர்தலில் தி. மு. கழகம் பணபலமில்லாமல் இறங்கியது; பணபலமில்லை என்றாலும் மக்கள் ஆதரவு இருந்தது. காங்கிரஸ் கட்சியோ கோடிக்கணக்கான ரூபாயை செலவழித்து தமிழ்நாட்டில் 151 இடங்களைக் கைப்பற்றியது.

"இந்தத் தேர்தலில் காங்கிரஸ்காரர்கள் செய்த பித்தலாட்டங்களைப் புரிந்து கொண்டோம். இனி அவர்களுடைய பித்தலாட்டச் செய்கைகள் அடுத்து வரும் தேர்தல்களின் போது ஒன்றும் பயனளிக்காது. இந்த தேர்தலில் தி. மு. கழகம் 15 இடங்களையே கைப்பற்றினாலும் நிறைந்த தேர்தல் அனுபவங்களை பெற்றுள்ளது."

நகர தி. மு. கழக செயலாளர் இ. ஆர். கிருஷ்ணன், தோழர் அன்புக்கரசு முதலியவர்களும் பேசினார்கள். (ந. கி.)

சென்னை-வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பக ஆண்டு விழா

சி. பி. சிற்றரசு, என். சிவரத்தினம் கலந்துகொண்டனர்

25—4—57 மாலை 6 மணிக்கு, சென்னை—வண்ணை கே. எஸ். பாண்டியன் படிப்பக 5-ம் ஆண்டு விழா, வண்ணை நாராணப்ப நாய்க்கன் தெரு 8-வது சந்தில், தோழர்கள் வேலன் முன்மொழிய, என். இராமதாஸ் வழிமொழிய தோழர் அ. பொ. அரசு தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தனது முன்னுரையில், தி. மு. கழகத்தின் பகுத்தறிவு கொள்கையையும், அரசியல் கொள்கையையும் விளக்கியதுடன், நாட்டிலே கழகம் பரப்பி வரும் பணியை மேற்கொண்டுள்ள பல படிப்பகங்களில் ஒன்றாக இப்படிப்பகம் திகழ்வது கண்டு பாராட்டுவதாயும், அதே நேரத்தில் மறைந்த பாண்டியன் போன்ற நல்ல தொண்டர்களின் பெயரால் படிப்பகங்களை நடத்தி வருவதைப் பாராட்டியும், தமிழர்களின் பண்பாடு—வரலாறு—வீரம்—நாகரீகம் முதலியவற்றை எடுத்துக்காட்டியும், இன்றைய நிலையில் தமிழர்கள் வடநாட்டு ஆதிக்கத்தின்கீழ் அல்லலுறுவதையும் எடுத்துக்காட்டி திராவிடத்தின் விடுதலையை வலியுறுத்தினார்.

அடுத்து, தோழர்கள் டி. பி. சுந்தரம், வி. எம். இராமையா, என். சிவரத்தினம் ஆகியோர் மாற்றுக் கட்சியினர் தி. மு. கழகத்தின் கொள்கையை மறுத்துப் பேசாமல், தி. மு. கழகத் தலைவர்களைத் தனிப்பட்ட முறையில் தாக்கிப் பேசுவதைக் கண்டித்தும், அது அரசியல் நாகரிகம் அல்லவென்றும் அறிவுறுத்தினர்.

இறுதியாகத் தோழர் சி. பி. சிற்றரசு அவர்கள், நேருவின் சமதர்மக் கொள்கை எத்தகையது என்பதையும், பொதுவுடைமைக் கட்சியினர் நம்மைத் தாக்கிப் பேசுவதையும் தி. மு. கழகக் கொள்கைகளை விளக்கியும் விரிவுரையாற்றினர்.

தலைவர் முடிவுரைக்குப் பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

பி.அண்டு.சி. ஆலைத் தொழிலாளர்கள் சார்பில் தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்களுக்குப் பாராட்டு விழாப் பொதுக்கூட்டம்

அண்ணா, நெடுஞ்செழியன், ஏ. கோவிந்தசாமி, இரா. செழியன், சத்தியவாணிமுத்து ஆகியோர் கலந்துகொண்டனர்

28—4—57 மாலை 5½ மணிக்கு பென்சனர் லேன் திடலில், தோழர் சி. எல்லப்பன் முன்மொழிய, தோழர் வரதன் வழிமொழிய தோழர் ப. வெங்கடாசலம் தலைமையில் வெற்றி பெற்ற தி. மு. கழக எம். எல். ஏ.-க்களுக்குப் பாராட்டு விழாப் பொதுக்கூட்டம் நடைபெற்றது.

தோழியர் யசோதரா இயக்கப் பண் பாடினார்.

தலைவர் முன்னுரையில் தொழிலாளர்களுக்கும்—தி. மு. கழகத்திற்கும் உள்ள தொடர்பை விளக்கினார்.

பின்னர், தோழர்கள் கோ. கேசவன், கே. சுப்பிரமணி, கதிர் டி. சுப்பிரமணியம், இராசகோபால் ஆகியோர் தேர்தல் நிலையையும், கழகம் பெற்ற வெற்றியையும், தொழிற்சங்க ஒத்துழைப்பையும், மாற்றாரின் எதிர்ப்பையும் விளக்கிப் பேசினர்.

அடுத்து, தோழியர் சத்தியவாணிமுத்து அவர்கள், வாக்களித்த தாய்மார்களுக்கும், தொழிலாளர் மக்களுக்கும், ஒத்துழைப்பு நல்கிய தோழர்களுக்கும் நன்றி கூறியதோடு, கழகம் சட்டமன்றத்தில் மேற்கொள்ளும் திட்டங்கள் புறக்கணிக்கப்படுமாயின் பிரச்சினையை மக்கள் மத்தியில் வைப்போமென்றும், மக்கள் எப்படிப் பெருவாரியான ஆதரவு நல்கி வெற்றியைத் தேடித் தந்தார்களோ, அதுபோல இனியும் தொடர்ந்து ஆதரவு தருமாறும் கேட்டுக்கொண்டார்.

அடுத்துப் பேசிய தி. மு. கழக சட்டசபைக் கட்சி செயலாளர் தோழர் ஏ. கோவிந்தசாமி அவர்கள், கடந்த காலத்தில் தி. மு. கழகத்தின் பிரதிநிதியாக எதிர்க்கட்சியில் இருந்துகொண்டு தான் ஆற்றிய பணியையும், இனி கழகம் ஆற்ற இருக்கும் பணியையும் விளக்கி, காங்கிரசார் போக்கையும் சுட்டிக்காட்டி விரிவுரை ஆற்றினார்.

பின்னர், இரா. செழியன் அவர்கள், கழகத்தின் எதிர்காலம் எவ்வாறிருக்கும் என்பதையும். சென்றகால செயல் முறைகளையும், நிகழ்கால கழகப் பணிகளையும், எதிர்காலத்தில் கழகம் எவ்வாறு பணியாற்றும் என்பதையும் மிகத் தெளிவாகவும், வரலாற்றுச் சான்றுகளுடனும் விளக்கினார்.

அடுத்துப் பேசிய பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள், தேர்தலில் கழகம் ஈடுபட்டு அதில் பெற்ற ஆதரவையும், காங்கிரசுக்கும் கழகத்திற்கும் உள்ள வாக்குகளின் வேறுபாட்டையும் புள்ளி விவரங்களோடு விளக்கி, நமது பலமும், மாற்றாரின் பலமும் எத்தகையது என்பதை வள்ளுவரின் குறளால் தெளிவாக்கி விரிவுரையாற்றினார்.

இறுதியாக அண்ணா அவர்கள், நாட்டு மக்களின் கண்ணோட்டம் எக்கட்சியின் மீது இருக்கிறது என்பதையும், ஆளும் கட்சியினர் எதிர்க்கட்சியினரை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதையும் விளக்கியதுடன், மக்களாட்சி சிறப்படைய, எதிர்க்கட்சிக்கும் ஆளும் கட்சிக்கும் தொடர்பு எத்தகையதாக இருக்கவேண்டுமென்பதையும் சிறப்பான எடுத்துக்காட்டுகளோடு விளக்கி உரையாற்றினார்.

தலைவரின் முடிவுரைக்குப்பின் செயலாளர் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

அண்ணா உள்ளிட்ட அனைவருக்கும், ஆலைத் தொழிலாளர்கள் சார்பிலும், பல மன்றங்கள்—படிப்பகங்கள்—பொது நிறுவனங்கள் சார்பிலும் மலர் மாலைகள், கைத்தறி ஆடைகள் அணிவிக்கப்பட்டன.

கி. மனோகரன்

தொழிலாளர் சங்கத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்

14—4—57-ல், சென்னை அரசியலார் தீவிரப் போக்கு-வரத்து பொதுத் தொழிலாளர் சங்கத்தின் நிர்வாகக் குழுவின் அவசரக் கூட்டம், சங்க அலுவலகத்தில் துணைத் தலைவர் தோழர் ஜி. இராதாகிருஷ்ணன் தலைமையில் நடைபெற்றது; அதுபோது, மேற்படி சங்கத்திற்குத் தலைவராக தோழர் கி. மனோகரன் அவர்கள் எதிர்ப்பின்றி ஒருமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

இதுவரையில் இச்சங்கத்திற்கு, சென்னை நகர மன்ற முன்னாள் தலைவர் தோழர் எம். இராதாகிருஷ்ணபிள்ளை தலைவராக இருந்துவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

'அண்ணா அறிவகம்' திறப்பு விழா

பொதுச்செயலாளர், ஏ. வி. பி. ஆசைத்தம்பி, சத்தியவாணிமுத்து கலந்துகொண்டனர்

22—4—57 மாலை 6 மணிக்கு சென்னை—9-வது வட்டம் 'அண்ணா அறிவகம்' திறப்பு விழாவும், தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோருக்குப் பாராட்டு விழாவும், தோழர் வி. முனுசாமி தலைமையில் நடைபெற்றது.

தலைவர் தனது முன்னுரையில் தி. மு. கழகக் கொள்கையை விளக்கியும், வெற்றி பெற்ற சட்டமன்ற உறுப்பினர்களைப் பாராட்டியும் சொற்பொழிவாற்றினார்.

அடுத்து, தோழர் கருணாகரன் சிறிதுநேரம் பேசியபின் தோழர் ஏ. வி. பி. ஆசைத்தம்பி, தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் பாராட்டுக்கு நன்றி தெரிவித்து, கழக எதிர்காலப் பணிகளையும் விளக்கிப் பேசினர்.

இறுதியாக பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'அண்ணா அறிவகத்'தைத் திறந்துவைத்துப் பேசுகையில், தோழர்களைப் பாராட்டியும், கழகம் பெற்ற ஆதரவையும், எதிர்காலத்தில் சட்டமன்ற உறுப்பினர்கள் ஆற்ற இருக்கும் பணியையும் விளக்கினார்.

தலைவர் முடிவுரைக்குப்பின் நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

சேலம் தொகுதி தேர்தல் வழக்கு நிதி

★

பொதுச்செயலாளர் தோழர் இரா. நெடுஞ்செழியன் அவர்களின் சேலம் தொகுதித் தேர்தல் வழக்கைச் சிறந்த வழக்கறிஞர்களைக்கொண்டு திறம்பட நடத்தவேண்டிக் கீழ்க்கண்ட வகையில் அன்புடன் வழக்கு நிதி தந்துள்ளார்கள் :—

		ரூ.	காசு
முன் வரவு	...	761	23
பாண்டிச்சேரி தி. மு. கழகம்	...	100	00
வி. சுப்பிரமணியம், கோவை	...	2	00
கே. எஸ். ஐயா, செயலாளர், தி. மு. கழகம் ஆக்ரா ரோடு	...	50	00
பி. பெருமாள், தலைவாசல்	...	1	19
ஆர். இராஜேந்திரன், சாகர்புரா (பீகார்)	...	10	00
தி. மு. க. மாணவர் கிளை, திருச்சி	...	20	00
திரு. வி. க. மறுமலர்ச்சி மன்றம், சென்னை-12.	...	5	99
கலியப்பேட்டை தி. மு. கழகம்	...	5	00
மதுரை 21—4—57 பொதுக்கூட்டத்தில்	...	9	00
விக்ரமாதித்தராசன் சகோதரர்கள், திண்டுக்கல்	...	2	22
தி. சுப்பிரமணியம், தக்கோலம்	...	2	00
பள்ளியநேலியனூர் தி. மு. கழகம்	...	51	00
சிறுவந்தாடு தி. மு. க. பொதுக்கூட்டத்தில்	...	41	41
ரூபாய் ஒன்று கொடுத்தவர்கள் : சொ. பசுபதி—சென்னை, பி. என். லிங்கம்—இராசிபுரம், கைலாசம்—திருவைகுந்தம், கே. கோவிந்தராசு—ஆனைதாண்டவபுரம்	...	4	00
சென்னை 8-வதுவட்டம் தி. மு. க. பொதுக்கூட்டத்தில்	...	34	50
ஆக மொத்தம்		1,099	54

நிதி அனுப்பிவைக்கவேண்டிய முகவரி :

இரா. நெடுஞ்செழியன்—26, நைனியப்பன் தெரு, மண்ணடி, சென்னை-1

'குலதெய்வம்' படம்

டில்லியில் குடியரசுத் தலைவர் நற்சான்று இதழ் வழங்கினார்

புதுடில்லி, ஏப். 29—

சென்ற ஆண்டில் இந்தியாவில் தயாரிக்கப்பட்ட பல மொழித் திரைப் படங்களுக்கு இந்தியக் குடியரசுத் தலைவர் நற்சான்று இதழ்கள் வழங்கியுள்ளார்.

முரசொலி-மாறன் கதை—வசனம் எழுதிய 'குலதெய்வம்' படத்திற்கு குடியரசுத் தலைவர் நற்சான்று இதழ் வழங்கினார். படத் தயாரிப்பாளர் திரு. எஸ். கல்யாணசுந்தரம் பரிசைப் பெற்றுக்கொண்டார்.

நெய்வேலி தெர்மல் மின்சாரத் திட்டம்

கடனுதவி பெற்றே நிறைவேறும்

ரூ. 68 கோடி செலவில் நெய்வேலியில் உருவாகும் பலநோக்கு பழுப்பு நிலக்கரித் திட்டத்தில் ஒன்றான தெர்மல் மின்சார உற்பத்தி நிலையத்திற்கு, நீண்டகாலக் கடன் உதவி பெறுவது பற்றி, இந்திய அரசாங்கம் யோசித்து வருகிறதாம்!

இந்தத் தெர்மல் மின்சாரத் திட்டத்திற்கு ரூ. 21,37,00,000 செலவாகும் என மதிப்பிடப்படுகிறது. கொழும்புத் திட்டத்தின் கீழும் ஓரளவுக்கு உதவி கிடைக்குமாம்.

அசையும் கை வரலாறு எழுதும்!

கழகத்திற்கு வளம் மிக்க எதிர்காலம் காத்திருக்கிறது

சென்னைக் கூட்டத்தில் இரா. செழியன் முழக்கம்

"எந்தக் காலத்திலாவது—என்றைக்காவது ஒருநாள், இந்தியத் துணைக்கண்டத்தில்—திராவிடத்தின் வரலாற்றில், நாம் வெற்றி பெற்றோம் என்ற செய்தி வரத்தான் போகிறது! சொல்வார்கள்—அசைந்த கை எழுதுகிறது; எழுதிய பின் அசைகிறது'—என்று! அவ்வாறு, வரலாற்றில் அசைகின்ற கை, ஒருநாள் எழுதத்தான் போகிறது—'வளமார் திராவிடம் அமைந்தது' என்ற வாக்கியத்தை! 'திராவிடத்தில் புதிய சமுதாயம்; விடுதலை பெற்ற அரசியல்' என்ற சொற்றொடர்களை! அது இன்றோ—பத்தாண்டு கழிந்தோ முப்பதாண்டு கழிந்தோ, இந்தத் தலைமுறையிலோ அடுத்தத் தலைமுறையிலோ—என்றைக்காவது ஒருநாள் திராவிடத்தின் உரிமைப்போர் வெற்றி பெற்றுதான் தீரும். தேர்தல் காலத்தில் எங்களுக்குக் கிடைத்த ஆதரவு—எங்கள் கட்சியில் மக்கள் காட்டிய உற்சாகம் அந்த உறுதியான நம்பிக்கையை எங்களுக்குத் தந்துள்ளது.

"தேர்தல் காலத்தில் நாங்கள் சென்ற இடமெல்லாம், அது சிற்றூராயினும் பேரூராயினும், சென்ற நேரம் பகல் பன்னிரண்டாயினும் நடுநிசி இரண்டாயினும், எங்கும் ஆவலுடன் மக்கள் திரள் காத்திருப்பதைக் கண்டோம்! மலர்ந்த முகங்களைக் கண்டோம்! விரிந்த உள்ளங்களைக் கண்டோம்! அவர்கள் காட்டிய ஆர்வம், அவர்கள் பார்வையில் வீசியஒளி, 'திராவிடத்தின் எதிர்காலம் நன்றாகத்தான் அமையப் போகின்றது' என்பதைக் காட்டின! நமக்குக் கிடைத்த 17 இலட்சம் வாக்குகள் அதைத் தெளிவாக்கியுள்ளன!

"நாம் வளரும் கட்சியினர், நமது கழகத் தோழர்கள் இளைஞர்கள். தேர்தலில் ஈடுபட்ட நமது தோழர்களைக் கவனித்தால், சராசரி வயது 30-க்குள்ளாகத்தான் இருக்கும். நாம் இன்னும் எவ்வளவோ தேர்தல்களை எதிர்காலத்தில் காணமுடியும். நல்ல எதிர்காலம்—மிகப்பெரிய எதிர்காலம்—வளர்ச்சிமிக்க வளமான எதிர்காலம் நம்மை எதிர்நோக்கி நிற்கிறது. நாட்டை விடுவிக்கும் பெரியதொரு முயற்சியில், வரலாறு போற்றத்தகும் பெரியதொரு விடுதலைப் போராட்டத்தில் நாம் ஈடுபட்டிருக்கிறோம். அந்தப் போராட்டத்தில் நாம் வெற்றிக் காணப் போகிறோம். அந்த வெற்றிக்கு நம்மையும் நமது கழகத்தையும், நமது நாட்டையும் நாம் தயாராக்கிக் கொள்வோமாக!"

என்று, 28—4—57-ல், சென்னை பி. அண்டு சி. ஆலைத் தொழிலாளர்கள் சார்பில், தி. மு. கழக எம்.எல்.ஏ.-க்களுக்கு நடைபெற்ற பாராட்டு விழாக் கூட்டத்தில் பேசுகையில், தோழர் இரா. செழியன் அவர்கள் குறிப்பிட்டார்.

(அவரது பேச்சின் முழு விவரம் நாளை வெளிவரும்)

டாக்டர் யூ. கிருஷ்ணராவ் சட்டசபைத் தலைவரானார்

சென்னை. மே 1—

சென்னை சட்டசபைத் தலைவராக டாக்டர் யூ. கிருஷ்ணராவ் அவர்கள், நேற்று தேர்ந்தெடுக்கப்பட்டார்.

நேற்று காலை சட்டசபை 11 மணிக்குக் கூடியது.

தற்காலிக சபைத் தலைவரான பக்தவத்சலநாயுடு அவர்கள், 'முன் தினம் பதவிப் பிரமாணம் எடுத்துக்கொள்ளாத உறுப்பினர்கள் பதவிப் பிரமாணம் எடுத்துக் கொள்ளலாம் என்று கூறினார்.

என். கே. பழனிச்சாமி என்ற கம்யூனிஸ்டு உறுப்பினர் மட்டும் பதவிப்பிரமாணம் எடுத்துக் கொண்டார்.

பின்னர், சபை இன்று கவனிக்க வேண்டிய விஷயங்கள் குறித்துக் கூறிவிட்டு, சட்டசபைத் தலைவர் தேர்தலைத் துவக்கினார்.

சபைத் தலைவர் பதவிக்கு இரண்டுபேர் போட்டியிட்டனர்.

காங்கிரஸ் கட்சியினர், டாக்டர் யூ. கிருஷ்ணராவ் அவர்களை அபேட்சகராக நிறுத்தினர்.

எதிர்க்கட்சியினர் சார்பில், தோழர் எம். செகன்னாதன் அவர்கள் நிறுத்தப்பட்டிருந்தார்.

வாக்கெடுப்பு இரகசிய முறையில் நடைபெற்றது.

டாக்டர் கிருஷ்ணராவ் அவர்களுக்கு 148 வாக்குகளும், செகன்னாதன் அவர்களுக்கு 44 வாக்குகளும் கிடைத்தன.

வாக்கு எண்ணிக்கையாளர்களாக தோழர்கள் சுருத்திருமன் (காங்.), எம். கல்யாணசுந்தரம் (கம்.) இருவரும் நியமிக்கப்பட்டிருந்தனர்.

டாக்டர் யூ. கிருஷ்ணராவ் சபைத் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டதாக தற்காலிகத் தலைவர் அறிவித்ததும், அவர், சர்க்கார் கட்சி சார்பில் சி. சுப்பிரமணியம், எதிர்க்கட்சியினர் சார்பில் வி.கே. இராமசாமி(முதலியார்) அவர்களால் தலைமைப்பீடத்திற்கு அழைத்து வரப்பட்டார்.

பின்னர், முதன் மந்திரி காமராசர், வி. கே. இராமசாமி(முதலியார்) ஆகியோர் புதிய தலைவரை வரவேற்றுப் பாராட்டிப் பேசியதும், அண்ணா அவர்கள் தலைவரை வரவேற்றுப் பாராட்டி அரியதோர் கருத்துரை ஆற்றினார்கள்.

அடுத்து தோழர்கள் கல்யாணசுந்தரம், எம். ஜெகன்னாதன், சாமி சகஜானந்தா, பி. எஸ். சின்னதுரை, எம். ஏ. முத்தையா செட்டியார், எஸ். பக்கிரிசாமி பிள்ளை, கே. என். பழனிசாமி கவுண்டர், எஸ். இராமசாமி நாயுடு, கே. இராமச்சந்திரன், டி. ஏ. ரசீத், எஸ். பி. சுப்பிரமணியம், ஏ. கோவிந்தசாமி, சந்தியவாணிமுத்து ஆகியோர் தலைவரை வரவேற்றுப் பாராட்டிப் பேசினர்.

உதவித் தலைவராக, பி. பக்தவச்சலநாயுடு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

உதவித் தலைவர், தலைவரும் தங்களுக்கு [illegible] கௌரவத்திற்கும், பாராட்டுதலுக்கும் நன்றி தெரிவித்துக் கொண்டனர்.

சபை அத்துடன் கலைக்கப்பட்டது.

அண்ணா பேச்சு

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"நல்ல மருத்துவராகிய தாங்கள், நோய்களின் வெளித் தோற்றத்திற்கு மருந்து தந்து வருவதுடன் திருப்தியடைய மாட்டீர்கள்; நோயின் மூல காரணத்தையும் அறிந்து அதற்கொப்ப மருந்து தருவீர்கள். அதுபோலவே, நாட்டிலுள்ள பிரச்சினைகளின் வெளித் தோற்றத்தை — அறிகுறிகளை மட்டும் கண்டால் போதுமானதல்ல; அவற்றிற்கான மூல காரணத்தையும் அறிந்தாக வேண்டும். நல்ல மருத்துவராகிய தாங்கள், அறிந்த ஒன்றே இது!

"நம் நாட்டில் சாதாரணமாக, இரயில் வண்டியில் முன்னதாக இடம் பிடித்துக் கொண்டவர்கள், பின்னால் வருபவர்களுக்கு இடமில்லை என்று கூறுவதைக் காண்கிறோம். அதைப் போலவே, அரசியலிலும் நிலைகள் இருக்கின்றன. நாங்கள் எப்படியோ தட்டுத் தடுமாறி, சட்டசபை என்ற இந்த இரயிலில் ஏறிவிட்டோம்.

"காலையும், கையையும் நீட்டிப் படுத்து, ஆதிக்கம் செலுத்துகிறவர்களை நாங்கள் 'எழுந்து கொண்டு எங்களுக்கு இடம் தாருங்கள்' என்று கேட்பதற்கு முன்னால், தாங்களே அவர்களை தங்களின் கண் பார்வையாலேயே, 'கையையும், காலையும் மடக்கிக்கொண்டு இவர்களும் பிரயாணத்திற்குத் தகுதி படைத்தவர்கள்தான்' என்று கூறி, எங்களுக்கு இடம் கிடைக்கச் செய்ய வேண்டுகிறேன்.

"மற்றும் இந்தச் சபையின் சௌரவத்தையும், கண்ணியத்தையும் காப்பாற்றுவதில், எங்களுக்கும் ஒரு சிறு பங்கு தரப்பட்டால், அதனை நாங்கள் சரிவர நிறைவேற்றுவோம் என்று உறுதி கூறுகிறேன்."

கார் டிரைவர் திறமை

கண்டுபிடிக்க நவீன கருவி

சென்னை, மே 1—

கார் டிரைவரின் பார்வைக் கூர்மை, சமயோசித புத்தி, கேட்கும் திறன் ஆகியவற்றை அளவிட்டு அறிவதற்கான நவீன முறையிலுள்ள கருவியொன்று அமெரிக்காவிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டு, சென்னை கன்னிமரா சிற்றுண்டி விடுதியில் இயக்கிக் காட்டப்பட்டிருக்கிறது.

சிறிய கைப்பெட்டி மாதிரி தோன்றும் அக்கருவியை இயக்குவது சுலபமாம்.

அந்நியர் தோட்டங்கள் தேசியமயமாகுமா?

டில்லியுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்களாம்!

"கேரள மாநிலத்திலுள்ள அந்நியருக்குச் சொந்தமான தோட்டங்களைத் தேசியமயமாக்குவது சம்பந்தமாக மத்திய அரசாங்கத்துடன் கேரள அரசாங்கம் பேச்சுவார்த்தை நடத்தும்" என்று, சட்டசபையில் தொழில் அமைச்சர் கே. பி. கோபாலன் தெரிவித்துள்ளார்.

"தோட்டங்கள் தேசியமயமாக்கப்பட்டால், அரசியல் அமைப்புப்படி நியாயமான நஷ்டஈடு தரப்படும்; ஆனால், நஷ்டஈட்டின் அளவை இப்போது சொல்வதற்கில்லை" என்றும், அவர் கூறியுள்ளார்.

[illegible]!

"5—5—57-ல், [illegible] போர்ஷியர் க. [illegible] அவர்கள் கலந்து கொள்ளவிருந்த, ஆசிரியர் வேலாயுதமன்ற ஆண்டு விழாவும் — [illegible] ஒத்தி வைக்கப்பட்டு 12—5—57-ல் நடைபெறும்"—என்று, மாயூரம் தி. மு. கழகச் செயலாளர் என். கிட்டப்பா அறிவிக்கிறார்.

அரசியல்—பொருளாதார— சமூகக் கருத்துமணங் கமழ

மன்றம்

[ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.]

★

5-5-57 முதல் ஞாயிறுதோறும் வார ஏடாக வெளிவருகிறது.

★

டபுள் கிரவுன் 1×4 அளவில் 12 பக்கங்கள்

தனி இதழ் விலை 16 காசு (ரூ. 0—2—6)

ஆண்டுக் கட்டணம் ... ரூ. 8—0—0

விவரங்கட்கு: நிருவாகி, "மன்றம்" 26, நைனியப்பன் தெரு, மண்ணடி - சென்னை-1.

கழகக் கூட்டங்கள்

★

இடைப்பாடி:

3—5—57 மாலை 7-மணிக்கு

தலைவர்:
நா. கோ. அருணகிரி

பேசுவோர்:
என். வி. நடராசன்
ப. கண்ணன்
ர. வரதராசன்

★

து. கிருஷ்ணபுரம்:

கருப்பு கோவில் மைதானத்தில்
3—5—57 மாலை 7 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா

தலைவர்: கே. இராமசாமி

பேசுவோர்:
சி. பி. சிற்றரசு
அரு. ஆதிமூலம்
அ. கலியபெருமாள்

★

ஆவணிப்பேரூர் கீழ்முகம்

(சேலம் மாவட்டம்)
போடிநாயக்கம்பட்டியில்
3—5—57 காலை 7 மணிக்கு
தி. மு. கழகத் துவக்கவிழா

கொடியேற்றுபவர்:
ஆர். வி. பெருமாள்

துவக்குபவர்: ர. வரதராசன்

பேசுவோர்:
என். வி. நடராசன்
ப. கண்ணன்
ப. இராமலிங்கம்

★

சித்தூர்

(சேலம் மாவட்டம்)
3—5—57 மாலை 4-30 மணிக்கு
தி. மு. கழகத் திறப்புவிழா

தலைவர்:
எம். ஆர். கோபாலகிருஷ்ணன்

கொடியேற்றுபவர்:
பா. பண்டரிநாதன்

துவக்குபவர்: ப. இராமலிங்கம்

பேசுவோர்:
என். வி. நடராசன்
ப. கண்ணன்
இரா. தாண்டவன்
ஏ. கே. கே. இராசமாணிக்கம்

★

திருச்சி—சோபனபுரம்

பேசுவோர்:
என். வி. நடராசன்
மு. பெ. முத்துகருப்பன்

(குறிப்பு:— தேதி குறிப்பிடப்படவில்லை.)

நன்றியறிவிப்புக் கூட்டம்

2—5—57 மாலை 6 மணிக்கு, சென்னை—அயன்புரம் மார்க்கெட் மைதானத்தில், சென்னை 21-வது வட்ட தி. மு. கழகச் சார்பில், தோழர் வ. தங்கசாமி தலைமையில் வாக்காளர்களுக்கு நன்றியறிவிப்புக் கூட்டம் நடைபெறும்; அதுபோது, தோழர்கள் மு. கருணாநிதி, ஏ. கோவிந்தசாமி, ஏ. வி. பி. ஆசைத்தம்பி, வி. எஸ். கோவிந்தராசன், தோழியர் சத்தியவாணிமுத்து ஆகியோர் சொற்பொழிவாற்றுவர்.

இராசா ரவிவர்மா 109-வது

பிறந்த தின விழாப் பொதுக்கூட்டம்

★

2—5—57 மாலை 5-30 மணிக்கு சென்னை—எழும்பூர், கெங்கு ரெட்டித் தெரு, பெருமாள் கோவில் அருகில் மேற்படி விழா தமிழவேள் பி. டி. இராசன் அவர்கள் தலைமையில் நடைபெறும்; பொதுச்செயலாளர் இரா. நெடுஞ்செழியன் அவர்கள் 'ரவிவர்மாவும்—அவரது கலையும்' என்பதுபற்றிச் சொற்பொழிவாற்றுவர்.

திருமணம்

3—5—57ல், கொழும்பு தென் பகுதி—பொரளை தி. மு. கழகங்களின் நிர்வாக உறுப்பினர் தோழர் டி. பி. முல்லைராஜநாதன்—தோழியர் அன்னலட்சுமி வாழ்க்கை ஒப்பந்த விழா, தோழர் எஸ். வி. பெருமாள் தலைமையில் கொழும்பு — மாளிகாவத்தை இரயில்வே லேனிலுள்ள மணமகள் இல்லத்தில் நடைபெறும். தோழர்கள் எ. இளஞ்செழியன், கே. எஸ். இராமசாமி வாழ்த்துரை வழங்குவர்.

தற்காலப் படிப்பின் மதிப்பீடு

மாணவர் திறன் பற்றி அறிக்கை

சென்னை, ஏப். 29—

"பரீட்சைகளில் மாணவர்களின் திறமை திருப்திகரமாக இல்லை" என்று, சென்னை 'பப்ளிக் சர்வீஸ் கமிஷன்' தன் ஆண்டு அறிக்கையில் குறிப்பிட்டுள்ளது.

பொருளைப் புரிந்துகொள்ள முடியாத சக்தி, ஆங்கிலம் எழுதுவதில் 'தர'க் குறைவு, இலக்கணப் பிழை ஆகியவைகள் குறைபாடுகளாகச் சுட்டிக் காட்டப்பட்டிருக்கின்றன.

மாணவர்கள் சரியாகப் படிக்காமல் பதில் எழுத முற்படுகின்றனராம். பி. ஏ. ஆனர்ஸ் போன்ற உயர்ந்த பரீட்சையில் மாணவர்கள் திறன் மிகவும் குறைந்துள்ளதாம். பொதுவிஷயங்களில் மாணவர்கள் தந்துள்ள பதில்கள் திருப்திகரமாக இல்லையாம்!

தமிழ் மொழியிலும், இலக்கியத்திலும் மாணவர்களின் திறமை ஏமாற்றத்தைத் தருவதாகவும், எஸ். எஸ். எல். சி., பரீட்சையில் பொது அறிவு குறைவாகவும், மொழி பெயர்த்தலில் திறமைக் குறைவும், சுருக்கி எழுதுவதில் தரக் குறைவும் காணப்பட்டுள்ளதாகக் கூறப்பட்டிருக்கிறது.

திராவிட முன்னேற்றக் கழகத்துக்காக தோழர் இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ., அவர்களால் அழகிரி அச்சகத்தில் அச்சிடப்பெற்று, (24. சூரியநாராயண செட்டித் தெரு, இராயபுரம் சென்னை) வெளியிடப்பெறுகிறது. ஆசிரியர்: இரா. நெடுஞ்செழியன் எம்.ஏ.